தலைவரால் நிறுவப்பட்டு அந்தக் குழுவினுடைய கூட்டம் இன்று காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே நடைபெறுகிறது. அந்தக் குழுவிலே, இடம் பெற்றுள்ள தேவர் பெருமக்கள், மென்மேனி பெருமாள், மென்மேனி இராமையாத் தேவர், மேட்டுப்பட்டி கிருஷ்ணத் தேவர், சாத்தூர் லட்சுமணன், சாத்தூர் வேலுச்சாமி, சாத்தூர் ஷண்முகவேலு, நத்தத்துப்பட்டி ராமன், மேட்டுப்பட்டி பெரியசாமி, சாத்தூர் சேகர், நத்தத்துப்பட்டி மருதுபாண்டியன், சாத்தூர் ரங்கசாமி, மேட்டுப்பட்டி சுந்தரபாண்டி, சாத்தூர் தனேந்திரன், சாத்தூர் ராஜா ஆகியோரும் ஆதிதிராவிடர் பெருமக்கள் சார்பாக, அந்த சமாதானக் குழுவில், வன்னிமடை சக்திவேல், வன்னிமடை செந்தூர்பாண்டியன், மென்மேனி வேலுச்சாமி, போத்திக்காட்டிப்பட்டி சண்முகம், இருக்கன் குடி முத்துசாமி, இருக்கன்குடி முத்தையா, இருக்கன் குடி இராமையா, மணியம்பட்டி சுப்பிரமணியம், கோல்வார்பட்டு சிவனு, செட்டுடையான்பட்டி அமிர்தராஜ், நல்லான்செட்டிப்பட்டி பாலகிருஷ்ணன், அணைக்கரைப்பட்டி பால்ராஜ், சாத்தூர் ராஜா, சாத்தூர் பெருமாள், நல்லான்செட்டிப்பட்டி தனராஜ், இருக்கன்குடி கருப்பசாமி ஆகியோர் இந்த அமைதிக் குழுவிலே இடம் பெற்று இன்றைய தினம் இது குறித்து அவர்கள் பேசுகிறார்கள். தற்போது நிலைமை மிக அமைதியாக இருப்பதாகவும் கடைகள் மற்றும் போக்குவரத்துக்கள் எல்லாம் செவ்வனே இயங்குவதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. தொடர்ந்து அங்கே அமைதி காக்கப்பட எல்லாவிதமான ஏற்பாடுகளையும் அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இவ்வளவு விரிவாகக் இது பற்றி, கூறிய பிறகும், மாண்புமிகு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துச் சொன்ன வேண்டுகோளை ஏற்று மாநில அளவிலேயும், மாவட்ட அளவிலேயும் அமைதிக் குழு நிறுவப்படும் என்று நான் ஒப்புக்கொண்டு கூறிய பிறகும் ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் அவையின் இதர அலுவர்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4. விதி 109-இன் கீழ் உறுப்பினரின் விளக்கம்.

தாம் அவையில் 22–3–1990 ஆம் நாளன்று பேசிய ஒரு கருத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி எண். 109-இன்கீழ் ஒரு தன்னிலை விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. அர்ஜுனன் அவர்கள் அளிப்பார்கள்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மேற்குத் தொடர்ச்சி மலையில் மரங்கள் களவாடப்படுவது குறித்து நான் 22–3–1990 அன்று சட்டமன்றத்திலே ஒரு குற்றச்சாட்டை எழுப்பிய சமயம் அதற்குண்டான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளேன். ஆனால் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் நான் அவையில் இல்லாத நேரத்தினைப் பயன்படுத்தி, என்னைக் களங்கப்படுத்தும் நோக்கத்துடன், என் மீது வழக்குத் தொடரப்படுகிறபோது, நான் சட்டமன்றத்திலே தானே பேசினேன், ஆகவே என் மீது வழக்குப் போடமுடியாது என்ற அந்த சந்துபொந்துக்குள் நுழைந்து இந்த வழக்கில் நான் ஆஜராகமாட்டேன் என்ற நிலையை அவர்கள் எடுப்பார்களானால், அவர்கள் கொடுத்த உறுதிமொழியிலிருந்து பின்வாங்கிவிட்டார்கள் என்றுதான் அர்த்தம். எனவே என்னைக் களங்கப்படுத்தும் நோக்கத்துடன் பேசினார்கள்.

நான் குற்றச்சாட்டை எழுப்பிய சமயம் தகுந்த ஆதாரத்துடன் தான் பேசினேன். அதற்கு முழுப்பொறுப்பையும் ஏற்பதாகவும் கூறியுள்ளேன்.

வீணாக பழியை யார் மீதும் சுமத்தவில்லை. அரசு விசாரணைக் கமிஷன் வைத்தாலும், மாணிக்கவாசகம் வழக்கு மன்றத்திலே என் மீது வழக்குப்போட்டாலும், சட்டமன்றத்தில் நான் பேசிய பேச்சுக்கு வழக்குப் போட முடியாது என்று என்னைக் காத்துக்கொள்ள சட்டமன்ற விதிகளின் சந்துபொந்துகளைப் பயன்படுத்தமாட்டேன் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய நீண்ட பொது வாழ்வில் நான் யார் மீதும் ஆதாரம் இல்லாமல் வீண் பழியை சுமத்தியது இல்லை. அதே நேரத்தில் தவறைக் கண்டிக்க அரசு விசாரணைக் கமிஷனோ அல்லது பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டாலோ, உண்மைகளை நான் நிரூபிப்பேன் என்று கூற வாய்ப்பளிக்க வேண்டுகிறேன்.

10–35 மணி

5. விதி 110-இன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

(அ) புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோட்டைப்பட்டினம், மற்றும் ஜகதாப்பட்டினத்திலிருந்து சென்ற மீனவர்களை விடுதலைப்புலிகள் என்று சொல்லப்படுகின்றவர்கள் கடத்திச் சென்று மற்றும் அவர்கள் விடுக்கப்பட்டது குறித்து கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கால்நடை பராமரிப்பு மற்றும் மீனள அமைச்சர் விதி 110-இன் கீழ் அறிக்கை ஒன்றை அளிப்பார்.